2018 ஜுலை 3] [திரு. இரா. துரைக்கண்ணு]

அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் சொல்லி அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலத்திலே ஒரு K.V.K. செயல்பட்டு வருகிறது. மத்திய அரசின் வரைமுறைப்படி, ஒரு மாவட்டத்திற்கு ஒரு K.V.K.-தான் அமைக்க முடியும். இப்போது ஈச்சங்கோட்டையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், தஞ்சாவூரில் மத்திய பயிர் பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம் இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும், பாளையப்பட்டி, திருவாரூரில் ஆர்.வி. சிவகாமி கல்லூரியும் இருக்கின்றன. ஆகவே, தேவையான அளவிற்கு அங்கே கல்லூரிகள் இருப்பதனால் இப்போது புதிதாக ஒரு கல்லூரி தொடங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. பரவாயில்லை. (குறுக்கீடு) திரு. துரை. சந்திரசேகரன், உட்காருங்கள்.*

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 44 முதல் 57 வரையிலான 14 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) திரு. ரவி, குழுவின் அறிக்கையைப் படியுங்கள்.*

திரு. விருகை V.N. ரவி: மைக் கிடைக்கவில்லை. அதனால்தான் படிக்க முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் இணைப்பு கொடுத்தாகிவிட்டது. நீங்கள் அறிக்கையைப் படியுங்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலரின் வாசத்தைப் பிரித்துவிடலாம்; மங்கையரின் எண்ணத்தை அறிந்துவிடலாம்; கடல் அலையின் ஓசையை நிறுத்திவிடலாம்; ஆனால், எங்கள் காவியத் தாயின் திட்டங்களையும், சாதனைகளையும் எவராலும் வெல்ல முடியாது என்று சொல்லும் அளவுக்கு இந்தச் சபையிலே திட்டங்களைத் தீட்டி, சாதனைகளைப் படைத்த சரித்திரத் தலைவி எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் நல்லாட்சி வழித்தொடரும் எளியவர், எதிரிகளெல்லாம் இப்படியும் ஒரு தலைவர் வந்துவிட்டாரே என்று ஏங்கும் அளவுக்கு எங்களை சிறப்பாக வழிநடத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இத்தாய்த் திருநாட்டை சிறந்த முறையில் ஆட்சி செய்து வரும் சேலத்தின் சிந்தனைச் சிற்பி, தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு துணையாக இருந்துவரும் பாண்டி நாட்டுத் தங்கம், அமைதியின் திருவுருவம் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒவ்வொருவரும், அவர்கள் பேசுவதற்கு முன்னால் அவர்களுடைய தலைவர்களை வாழ்த்திப் பேசுவது மரபாகத்தான் இருக்கிறது. அதில் ஒன்றும் problem இல்லை, விடுங்கள்.

திரு. விருகை V.N. ரவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016-2018 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 63 மற்றும் 64 ஆகிய இரண்டு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி.